செய்தித் தாளாகப் பதிவுபெற்றது

வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

உ

சிவமயம்

# இந்துசாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஹு (1889) ஆவணிமீ 28-ம் உ

அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 356

புத்-அஎ] யாழ்ப்பாணம்:- இராக்ஷத ஹு ஆடி மீ உஉ-உ வெள்ளிக்கிழமை (8-8-1975) [இல: கஅ

# சிவாலயங்களிற்பூசைகள்விழாக்களை சிவாகமநெறிமுறையே நிகழ்த்தல் வேண்டும்

[ திருச்சிராப்பள்ளி - திருநெறிய தமிழிசை மன்றத்தின் 2ஆம் ஆண்டு நிறைவின் சார்பாக திருமுறை இசைப் பெருவிழா மலைக் கோயிலின்கண்ணே அருட் பொலிந்து விளங்கும் நூற்றுக் கால் மண்டபத்தில் 26-7-75 சனிக்கிழமையும், 26-7-75 ஞாயிற்றுக் கிழமையும் நிகழ்ச்சிமுறையில் அமையப்பெற்றவாறு நிகழ்ந்தேறின. இவ் விழாவில் சிவநெறி வளர்க்கும் சீலர்கள், ஓதுவா மூர்த்திகள், தேவார இசை ஆசிரியர்கள், பேராசிரியர்கள் ஆகிய பலர் கலந்து கொண்டனர். இவ விழாக் குழுவின் அழைப்பின் பேரில் ஈழத்திலிருந்து கலந்துகொண்ட திரு. R. நமசிவாயம் (திருக்கேதீச்சரத் திருக்கோயில் திருப்பணிச் சபைச் செயலாளர்) அவர்கள் முதல் நாள் விழாவில் தொடக்கவுரை நிகழ்த்தும்அமையம் கூறியவை.]

மதிப்புக்குரிய தலைவர் அவர்களே, பண்இசை வித்துவான்களே, சிவநேயச் செல்வர்களே, தாய்மார்களே பிள்ளைகளே உங்கள் அனைவருக்கும் எனது வணக்கம்,

திருமுறையைப் பற்றிப் பேசுவதற்கு தகுதியும் ஆற்றலும் இல்லாதவன். ஆனால் இந்த நிகழ்ச்சியில் பங்கு பற்றுவதற்கு ஏற்றுக் கொண்டபடியால் சில வார்த்தைகள் கூறுவது எனது கடமையாகும்.

திருமுறை சைவசமயத்தின் முதல் நூல்களாகிய வேத சிவாகமங்களின் சாரமாகும் இது பெரியோரின் முடிபு. பேரறிஞர் காசிவாசி செந்தில்நாதஐயர் அவர்கள் "தேவாரம் வேதசாரம்" எனும் பெரு நூல் ஒன்றை எழுதியுள்ளனர், இவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் ஆனால் தங்கள் நாட்டில் பல ஆண்டு வாழ்ந்தவர் திருமுறை முழுமுதற் கடவுளாம் சிவபெருமானின் அருள் பெற்ற நாயன்மார் திருவாக்கினின்றும் எழுந்தவை வேத சிவாகமங்களுக் இல்லாத தனிச் சிறப்பு வாய்ந்தது. வேதங்களும் சிவாகமங்களும் கூறும் மந்திரங்கள் வடமொழியைத் தெரிந்தவர்களுக்குத்தான் பயனளிப்பவை. அடுத்து யாகங்களும் குண்டங்களும் கிரியைகளும் அவைகளின் தத்துவ விளக்கங்களைத் தெரிந்தவர்களுக்குத்தான் பக்தி உணர்ச்சியை உண்டாக்கும் ஆற்றல் உள்ளவை.

சைவ சமயத்துக்குள்ள சைவ சித்தாந்தக் கொள்கைகள் அனைத்தையும் விளக்குபவை. சிவபெருமானுடைய தடத்த சொரூப விலக்கணங்களையும் விபூதி உருத்திராக்க மகிமைகளையும் பிரணவம் பஞ்சாக்கரம் முதலிய மந்திரங்களையும் சரியை கிரியை யோக ஞானங்களையும் பக்தி நெறியையும் பலவற்றையும் விரித்துக் கூறுவனவாம், சைவ சமயத்தின் தத்துவ நூல்களாகிய மெய்கண்ட சாத்திரம் திருமுறைகளைத் தழுவியே எழுந்தவை. திருமுறைகளைத் தவறாது பாராயணம் செய்து வந்தால் இறைவனைக் காணலாம். திருமுறை சைவ சமயத்தின் இருதயத் துடிப்பு.

எனது பேச்சை முடிப்பதற்குமுன் முக்கியமான விடயம் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நான் பிரச்சினைகளைக் கிளப்பிவிடுவதாகக் கருதவேண்டாம். இலங்கையில் இருபது இலட்சம் தமிழ் மக்கள் வாழ்கின்றனர். அவர்களில் நூற்றுக்கு எண்பது வீதம் உள்ளவர்கள் சைவ மக்கள். உங்கள் நாட்டிலுள்ள ஆதீனங்களும், மடங்களும் சிவாசாரியர்களும், அறிஞர்களும் தபதிகளும், தேசிகர்களும் எமக்கு அருள் மாரி வழங்கி வருகிறார்கள்! திருக்கேதீச்சரத் திருப்பணியும் இவர்கள் ஒத்துழைப்பின் பேரிற்றான் நடைபெறுகின்றது. தருமை ஆதீனமும், திருப்பனந்தாள் காசி மடமும், தமிழ் நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையும், தமிழ் நாடு அரசினர் சிற்பக் கலைப் பயிற்சி நிலையக் கண்காணிப்பாளர் திரு. வை, கணபதி தபதி அவர்களும் அவர்களது உதவியாளர்களும் எமது திருப்பணிக்குப் பேருதவி புரிந்து வருகிறார்கள். நீங்கள் சிவாகம முறைகளில் தடம் புரளவிட்டால் அதன்விளைவு எம்மையும் பாதிக்கும்.

சிவாலயங்களில் பூசைகளும் திருவிழாக்களும் வழிபாடுகளும் சிவாகம முறைப்படியே நடைபெறவேண்டும், இச் சிவாலயங்கள் சிவாகம முறைப்படி அமைக்கப்பெற்றவை,

நாயன்மார்கள் சைவத்தை மட்டும் வளர்த்தவர்களல்லர் தமிழையும் வளர்த்தவர்கள், தமிழ் நாட்டை அன்னியர் பண்பாட்டிலிருந்து காப்பாற்றினவர்கள். தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என்னும் இவ்வைந்தும் சைவத்துக்கும் சிவ பூசைக்கும், சிவாலய நித்தியநைமித்தியங்களுக்கும், சிவதரிசனத்துக்கும் அடியவர் பூசைக்கும் நியம மந்திரங்களாயுள்ளவை. இவ்வாறு திருக்

[ வளர்ச்சி 2-ம் பக்கம் ]

## திரு (முறை) மடுக்குஞ் செவிக்கு பொப்பிசை அடுக்குமோ ?

கலப்பு என்பது காணாத அறையில்லை இப்பொழுது தப்பிசையும் - பொப்பிசையும் என்ற கலப்பு கலைக்குள் நுழைந்து விட்டது!

'பொப்' பென்றால் அப்படியே கூட்டமாம். கேட்கிறவர்கள் ஆட்டமாம். இதன் மாயமென்ன' ஆமவேண்டியது இசையாளர் கடமை

## யாழ். வண்ணை ஸ்ரீ தையல் நாயகி அம்பாள் தேர்விழா

இன்று அம்பாள் தேர் உலா வழமைபோல செறியாக நடைபெறுகின்றது ஆடிப் பூரமாகிய நாளைய தினம் தீர்த்தத் திருவிழா நிகழும் பெருந் தொகையான பத்தர்கள் பெருவிழாக்களிற் பங்கு கொண்டனர்.

## துர்க்கையம்பாள் கோயிற் கொடியேற்றம்

நாளைய தினம் ஆடிப்பூரம் ஆகும் சுபவேளையில் தெல்லிப்பளை துர்க்கை யம்பாள் கோயிற் கொடியேற்றம் பகல் 11 மணிக்கு நிகழும். தொடர்ந்து பெருந்திருவிழாக்கள் நடைபெறும்.

தேர்த் திருவிழா 18-8-75 செவ்வாய்க்கிழமையும் தீர்த்தம் 19-3-75 புதன்கிழமை நிகழும். ஒவ்வொரு இரவும் சிறப்பு நிகழ்ச்சியாக திருமுறைப் பாராயணம் சமய விரிவுரை என்பன இடம்பெறும்.

உ

## சுந்தரமூர்த்தி நாயனர் குருபூசை

சைவபரிபாலன சபையாரது நாவலர் ஆச்சிரமத்திற் குருபூசை. 13-8-75 முற்பகல் சிவபூசையும் புராணபடனமும், மாலை திருமுறை ஓதுதலும் சொற்பொழிவும் நடைபெறும்.

சபைத்தலைவர் திரு. த. சோமசுந்தரம் அவர்கள் விழாவுக்குத் தலைமை தாங்குவார்,

கௌரவ காரியதரிசி.

# புதுவை விசாலாட்சிஅம்பாள் தேர்த் திருவிழா

[ திருமதி. மங்கையர்க்கரசி — லோகேஸ்வரன் பீ. ஏ. ]

[ புதுவை சிவன் கோயிலில் ( இன்று ) 8—8—75 இல் நிகழும் இரதோற்சவ வைபவம் சார்பாக இக் கட்டுரை வெளிவருகிறது].

எங்கும் நிறைந்த இறைவன் அருபமாய் உள்ளவன். அவனை உருவப் பிரம்மமாய் பிரதிட்டை செய்து வழிபடும் இடமே ஆலயம். வேண்டுவார் வேண்டுவதை ஈவதையே கருத்தாகக் கொண்ட இறைவனுக்கு அடியவர் செய்யும் கிரியைகள், உற்சவங்கள். வழிபாடுகள் யாவும் அன்புக் காணிக்கையாகும். அவனுக்குச் செய்யப்படும் கிரியைகளில் இரதோற்சவமும் இடம்பெறும்.

முதலில் இறைவன் தேவரைக்காக்க அசுரரை அழித்துத் திரிபுரமெரித்த வரலாறே இவ்வுற்சவம் தோன்றக் காரணமமைந்தது. பின்னர் ஆன்மாக்களின் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களை அழித்து அவர்களை இரட்சிக்க வென்று வந்த திருக்கோலம் தேர் உற்சவத்தில் இடம்பெறலாயிற்று. வேதங்களைக் குதிரைகளாகவும் சூரிய சந்திரரைச் சகடாகவும் அமைத்த தேரில் இறைவன் புறப்பட்டதாக ஐதிகம் உண்டு. பின்னர் எல்லா ஆலயங்களிலும் அந்த ஆலயப் பிரதான மூர்த்தத்தை வைத்து இரதோற்சவ விழாக் கொண்டாடும் வழக்காயிற்று.

இனி, புதுவை சிவன்கோயில் உற்சவ வரலாற்றைப் பார்ப்போம். ஆனி உத்தரம் சிவனது தினம். அன்று தீர்த்தத்துடன் பத்து நாள் திருவிழா முடிவுறும். இதற்கு முன் தினம் விசாலாட்சி சமேதர விசுவநாதர் தேரில் பவனி வருவார். விழாவின் முதல் நாள் கொடியேற்று வைபவம் இறைவனது படைத்தற் றொழிலையும், அடுத்த எட்டுநாட்கள் நடைபெறும் திருவிழாக்கள் காத்தல் தொழிலையும் ஒன்பதாம் நாள் நடைபெறும் தேர் உற்சவம் அழித்தல் தொழிலையும் இறுதி நாள் நடக்கும் தீர்த்தம் அருளல் தொழிலையும் அன்றிரவு நடைபெறும் மௌனோற்சவம் மறைத்தல் தொழிலையும் குறிக்கும்.

சுக்கில பட்சத்து ஆடிப் பூரம் அம்பாள் தக்கன் மகள் தாட்சாயணியாக அவதரித்த தினமாகும். ஆடி மாதப் பரணி நட்சத்திரத்தில் கொடியேற்றத்துடன் அம்பாளுக்கான விழா ஆரம்பித்து ஆடிப் பூரத்தன்று தீர்த்தத் திருவிழா நடைபெறும். மக்களை ஆசீர்வதிக்க வேண்டுமென்று உலக அன்னையாகிய சக்தி அவதரித்த தினத்தில் பக்தர்கள் தாங்கள் நல்லின்ப வாழ்வு பெற வேண்டுமென்று தேவியைப் பிரார்த்திக்கிறார்கள். தங்கள் அன்புக்குரியவர் நலத்தை முன்னிட்டுத் தேவியைப் பிரார்த்தித்துக்கொள்வதுமுண்டு,

உலகில் எட்டு சக்திகள் தேவியின் பரிவாரங்களாகத் தொழில் புரிந்து வருகின்றன, இக் கொள்கையின் பயனாக அட்ட மகாசித்திகள் என்னும் பேற்றைச் சித்தர்கள் பெறுகிறார்கள்,

( வளர்ச்சி 2-ஆம் பக்கம் )

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.

திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

இராக்ஷத ஹூ ஆடி மீ உ௩-௨ வெள்ளி


## திருக்கோயிலும் திருப்பணியும்

ஈழநாட்டுத் திருத்தலங்களிற் பலவற்றில் திருப்பணி இன்றியமையாதிருப்பதைச் சைவ மக்கள் நன்கறிவர். ஏககாலத்தில் எல்லாத் திருப்பணிகளுக்கும் வேண்டிய நிதியைத் திரட்டுவது சுலபமான காரியமின்று. இந்த நிலைமையிலே திருப்பணி வேலைகள் தடையுற்றிருப்பதைச் சற்றே ஆராய்ந்தால் ஏற்ற வழி வகைகளை எடுப்பதற்கு வழி தோன்றும்.

பெருந் திருவிழாக்கள் நிகழும் திருக் கோயில்களிலே திருப்பணி அக் காலங்களில உபயகாரரின் உதவியும வழிபடுவோரின் தொண்டும் ஆக இயங்குவது பொருத்தமாகும், திருக்கேதீச்சரம், மாவிட்டபுரம் முதலிய திருத்தலங்களில் நடைபெறும் திருப்பணிகள் இந் நாடெங்கணுமுள்ள சைவ மக்களின் பொதுப் பணியாய் அமைவன. ஆகையால் அப் பெரும் பணிகள் தனி நெறியில் நிகழ்வன.

ஏனைய திருக்கோயில்களிலே நிகழ்கின்ற திருப்பணிகளுக்குப் பெருந் திருவிழாக் காலங்களிலே அடியார்கள் மனமுவந்துதவக்கூடிய வழி வகைகளை எடுத்தல் நன்று.

ஆலய வழிபாட்டின் ஒரு அம்சமாகத் திருப்பணித் தொண்டு கருதப்படுதல் வேண்டும். திருக்கோயில் சீராகச் சிறப்பாக விளங்கும்பொழுதுதான் அடியார்களின் வழிபாட்டுணர்ச்சி மேலோங்கும். சமய குரவர்களின் காலத்திலே ஆலயங்களின் அமைப்பும் வழிபடுபவர்களின் நெறியும ஒருங்கே சிறப்புற்ற வண்ணமாயிருந்தன. மன்னர்களும் பெருங் கோயில்களை நன்னிலையிற் பரிபாலித்து வந்தனர். கோபுரங்கள் தூபிகள் வீதி மதில்கள் மண்டபங்கள் வாகனங்கள் யாவும் ஆகம முறைப்படி அலங்காரமாக அணியாயமைந்தன. அந்த நிலைமை இடைக்காலத்திற் சீர் குன்றியதால் இப்பொழுது பெருநிதியில்லாது திருப்பணி நிகழ்த்துவது அரிதாகும்.

பாரதத் தமிழகத்திலே அரசினர் பரிபாலனத்திலுள்ள திருக்கோயில்களுக்குத் திருப்பணிக்கு வேண்டிய நிதி பெற்றுக்கொள்ளுதல சுலபம். அந்த நிலைமை ஈழத்திலில்லை. மக்களே திருப்பணிக்கெனப் பொன்னும் பொருளும் கொடுக்க வேண்டியவர்களாகின்றனர். எனவே திருப்பணித் தொண்டு செம்மையாய் நிகழப் பொருத்தமான திட்டத்தை வகுப்பது ஆலய பரிபாலன சபைகளின் பெருங் கடமையாகும்.

## புதுவை விசாலாட்சி அம்பாள்

(1-ஆம் பக்கத்து வளர்ச்சி)

புதுவை மக்களுக்கு அருள்பாலிக்க விசாலாட்சி அம்மை பவனி வரும் தேர் எண் கோண வடிவிலமைந்தது. இவ்வகைத் தேர் திராவிடம் என வழங்கப்படுகிறது. ஒரு கோணத்துக்கு இரு குதிரைகள் வீதம் பதினாறு குதிரைகள் இத்தேரில் பூட்டப்பட்டுள்ளன. முகப்பில பிள்ளையார் விசாலாட்சி சமேதர விசுவநாதர், வள்ளி - முருகன் - தெய்வயானை ஆகியோர் முறையே மூஷிக, இடப, கலாப வாகனங்களிற் காட்சி தருகின்றனர். தேரைச் சுற்றிவர சிவன் பன்றிக் குட்டிகளுக்குப் பாலூட்டியமை, விஷ்ணு மலையைக் குடையாகப் பிடித்தமை, மாலின் அனந்த சயனம், அனுமன் சஞ்சீவி மலையைப் பெயர்த்துச் செல்லல், சிவலிங்கம், விஷ்ணு பெண்ணுக வந்து பாம்பின் தலையில் நடனமாடல் போன்ற புராணக் கதைகளிற் சில சித்தரிக்கப்பட்டுள்ளன. தேரின் முடியும் குடையும் வெள்ளியாலாக்கப்பட்டுள்ளன. இத்தேரில விசாலாட்சி அம்மை மட்டும் எழுந்தருளி வீதி வலம் வரும காட்சியைத் தேர்த்திருவிழாவிலன்று காணலாம். மறு நாள் தீர்த்தோற்சவத்தில் திருக்குளத்தில் அம்பாளை நீராட்டுவர். அன்றிரவு மௌனோற்சவம் இடம்பெறும். இறுதி நாளான பூங்காவனத்தன்று விசாலாட்சி - விசுவநாதர் திருக்கல்யாணத்துடன் விழா இனிது நிறைவேறும்.

மன்றின் மணிவிளக்கு எனலாம் மருவுழக நகைபோற்றி
ஒன்றிய மங்கல நாணின் ஒளிபோற்றி உலகும்பர்
சென்று தொழஅருள் சுரக்குஞ் சிவகாம சுந்தரி தன்
நின்ற திருநிலை போற்றி நிலவு திருஅடிபோற்றி".

## தமிழகச் சைப்பெயார் சிறப்புரை

தமிழ்நாட்டைச் சேர்ந்த பேரூர் சைவப்பெரியார் திரு. தங்கவேல் அவர்களும். அவர் மகனுர் திரு. விசுவநாதம் அவர்களும் பலவிடங்களிலும் சைவசமயச சொற்பொழிவாற்றிவருகின்றனர். இவரது சிறப்புச்சொற்பொழிவு யாழ இந்துக்கல்லூரியில் அ இ. சேக்கிழார் மன்றத்தின் ஆதரவில் நாளை (9-8-75) நிகழும். இவர்களை எங்கள் அலுவலகத்திற்கு சிவநெறிப்புரவலர் திரு. க. கனகராசா அவர்கள் 7-8-75 அன்று அழைத்து வந்தார்கள். பெரியாரவர்கள் 'இந்துசாதனம்' அலுவலகத்தைச் சுற்றிப் பார்வையிட்டு கலந்துரையாடினர்கள். இவர்கள யாழ். திருநெல்வேலிச் சைவச் சிறுவர் இல்லத்தில் சிறப்புரை நிகழ்த்தினர்கள், சென்ற 4-8-75 திங்கட்கிழமை மாலை நிகழ்ந்த இப்பேச்சை மாணவ மாணவிகள் அத்தனை பேரும அமைதியுடன் கேட்டுப் பயனடைந்தார்கள். அவ் வேளை திரு. கனகராசா அவர்கள் தலைமை தாங்கித் திருஞானசம்பந்தப் பெருமானின் இடர்களையும் பதிகத்தை திரு. பட்டுச்சாமி ஓதுவாரின் உரையுடன் வழங்கினர்கள்.

## அகில இலங்கை இந்து மாமன்றம்

அகில இலங்கை இந்துமாமன்ற முகாமைக்குழுக் கூட்டம் உபதலைவர் திரு. கோ ஆழ்வாப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மன்றச் செயலாளராக இருந்து வந்த திரு. ஆ. சின்னத்தம்பி அ. இலங்கை இந்து மாமன்றத் தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பெற்ருர் முன்னர் தலைவராக இருந்த நீதியரசர் திரு. வீ. சிவசுப்பிரமணியம் அவர்கள் அப் பதவியிலிருந்து விலகியமையால் இத்தெரிவு நிகழ்ந்தது. செயலாளராக திரு. செ. விசாகரெத்தினமும் பொருளாளராக திரு சி சிவசுப்பிரமணியமும் உபபொருளாளராக திரு. இராமேரின்பநாயகமும் தெரிவு செய்யப்பெற்றனர். தர்மகர்த்தா சபைத் தலைவராக மன்றத் தலைவர் திரு. ஆ. சின்னத்தம்பியும், உறுப்பினர்களில் ஒருவராக டாக்டர் திருமதி சிவயோகம்ஸ்ரீஸ்கந்தராசாவும் தெரிவு செய்யப்பெற்றனர்.

## ஸ்ரீ வேலுப்பிள்ளை அடியார் அவர்கள்

நமது நாட்டில் சைவ சாதனங்களின் பெருமையையும் இறைபக்தியையும மக்களிடையே பரப்பி வந்த பிரசித்தி பெற்ற நயினுதீவுச் சுவாமி என அன்புடன் போற்றப்பட்டு வந்த ஸ்ரீமத் முத்துச்சுவாமி பெரியாரின் கனிஷ்ட சகோதரனுகிய திரு, வேலுப்பிள்ளை எனப்படும் அடியார் 12-7-75 சனிக்கிழமை தமது இல்லத்தில் சிவநாமங்களை ஓதிக் கொண்டு சாந்தமாகச் சிவபதமடைந்தார்' அப்பெரியார் நயினுதீவுச்சுவாமிகளின் சமாதிக் கோயிலுக்கு அக் கோயில் நிறுவப்பட்ட காலம் தொடக்கம் பூசை புரிந்தும் வருடந்தோறும் சுவாமிகளின குருபூசைகளையும் மிகச் சிறப்பாக நடத்தி வந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது.

சமாதி கோயிலுக்கு அவர் புரிந்து வந்த தொண்டுகளை அவருடைய புத்திரர்கள் தொடர்ந்து பார்த்து வருவார்கள் என அறிந்து மகிழுகின்றோம்.

## சிவாலயங்களிற்பூசை

(1ம் பக்க வளர்ச்சி)

கோவையாகுண் மையிலே சொல்லப் பட்டது" இது யாழ்ப்பாணம் ஆறுமுகநாவலரவர்கள் திருவாக்கு.

சிவாலயங்களில் திருமுறைகள் மட்டும்தான் பாடப்படவேண்டும். அவ்வண்ணம் விஷ்ணு ஆலயங்களில் பிரபந்தங்கள், பாசுரங்கள்தான் பாடப்படவேண்டும்.

நாம் கோயில்களுக்குச் செல்வது விக்கிர வழிபாட்டிற்கே. சிவாலயங்களுக்குச் சிவ பெருமானை வழிபடச் செல்கின்றோம. அவ்விடத்தில் எமது மனதை ஒருவழிப்படுத்தி பக்தி உணர்ச்சியோடு வழிபடுதல் வேண்டும். திருமுறைகளைப்பாடுவதும் கேட்பதுவும் பக்தி உணர்ச்சியை எமக்கு உண்டாக்குவதற்குத் துணையாக வுள்ளன. இவைகளைப் பண் இசையோடு பாடவேண்டும், பண் இசையைப் பாடுவதற்குப் பயிற்சியும் ஞானமும் பத்தியும் அவசியமாகும். இன்றைய சைவமக்களுட் பலர் பண்பயிற்சி யற்றவர்களா யிருப்பதைக் காண்கிறோம். அத்தகையவர்களில் யானும் ஒருவன். இந்த நிலைமையைநாம் மாற்றிட வேண்டும், தகுதி வாய்ந்தோர் திருமுறை ஒதிஞல் கேட்பவர்களுக்குப் பக்தியுணர்ச்சி ஏற்படும். திருமுறைகள் சிவனது தோத்திரங்கள், சிவனை வழிபடும்வேளையில் பிரபந்தத்தை அல்லது பாசுரத்தைப் பாடுவதைக் கேட்டால் எமது சிவ சிந்தனை கலைந்து விடும். சிவ தரிசனம் செய்ய வியலாது. அவ்வண்ணம் சிவ புராணம் முதலிய திருவாசகங்களை அல்லது தேவாரங்களைப் பாடுவதைக் கேட்பின் விஷ்ணு தரிசனம் செய்ய வியலாது மனக்குழப்ப முண்டாகும். இவற்றைக் கோயில் அதிகாரிகள் கருத்திற் கொள்ளல் வேண்டும். கோயில்களில் பொருத்தமற்ற இசைகளைப் பரப்புவதை நிறுத்த வேண்டும். இவற்றை நம சைவாபிமானிகள் சிந்திப்பார்களாக.

திருவருளை முன்னிட்டு இவ் விழாவைத் தொடக்கி வைக்கிறேன். என்னை அழைத்ததற்கு மிக நன்றி வணக்கம்.


## கோட்டுக் கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் வழ· இல. DC. D/14

வல்வெட்டி (1) ஆறுமுகம் சிவப்பிரகாசம் 2 பெண் பொன்னம்மா
எதிராக — வழக்காளிகள்
கம்பர்மலை உடுப்பிட்டி (1) வயிரவன் சின்னவன
(மரணம்) (2) பெண் குண்டுமணி
1 (a) கந்தையா சதாசிவம்
2 (b) தவமணி கம்பர்மலை; உடுப்பிட்டி
எதிரிகள்

மேற் குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படும் ஆதனம் 1975-ம் ஆண்டு ஆவணி மாதம் 26-ஆந் தேதி (26-8-75) செவ்வாய்க்கிழமை முற் பகல் 10-30 மணி தொடக்கம் குறித்த காணியிடமாக விருந்து என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோவிற்பற்று வல்வெட்டிக் குறிச்சி யிறை "குஞ்சியார்சீமா பெரியசீமா" நிப. 6¾. இதில் தெற்குப் புறமாக குளி 12 நீக்கி மிகுதி வடக்குப்புறமாக நி பர 5 குளி 15. எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு ரேட்டு மேற்கு செல்லன் பெண் ஆச்சிக்கும மறுபேருக்குமுரிய வாதனம். தெறகு சங்கரன் பொன்னனுக்கும் மறுபேருக்குமுரிய வாதனம். இவவெல்லைக்குட்பட்ட நிலம் பனைகள் வடலிகள், வேம்பு பூவரசுகளடங்கலிற சொரியலாய் அரைவாசியும், மேற்கே இருக்கும வீடும் அடுககளையும் புதிதாக வெட்டப்பட்ட கிணறும் மலகூடமும் வடக்குப்புறமாக இருககும மதிலும் நிகதமாகவும்.

### கணக்கு விபரம்

| | | | |
|---|---|---|---|
| தீர்வைத்தொகை | ரூபா | 8030 | 00 |
| ரூபா. 5000/-க்கு 28-5-71 தொடக்கம் 3-7-72 வரை 12 வீத வட்டி | | 650 | 00 |
| | மொத்தம் | 8680 | 00 |
| ரூபா. 8680 00 க்கு 4-7-72 தொடக்கம் 16-7-73 வரை 5 வீத வட்டி | | 434 | 00 |
| | | 9114 | 00 |
| 16-7-73-ல் கொடுத்தது | | 1000 | 00 |
| | மிகுதி | 8114 | 00 |
| ரூபா. 8114 00 க்கு 17-7-73 தொடக்கம் 7-8-73 வரை 5 வீத வட்டி | | 22 | 54 |
| | | 8136 | 54 |
| 7-8-73-ல் கொடுத்தது | | 500 | 00 |
| | மிகுதி | 7636 | 54 |
| ரூபா- 7636-54-க்கு 8-8-73 தொடக்கம் 7-11-73 வரை 5 வீத வட்டி | | 95 | 45 |
| | கூடிய தொகை | 7731 | 99 |
| 7.11-73 கொடுத்தது | | 500 | 00 |
| | மிகுதி | 7231 | 99 |
| ரூபா. 7231-99 க்கு 8-11-73 தொடக்கம் 16-7-75 வரை 5 வீத வட்டி | | 622 | 67 |
| கணக்கிட்ட செலவு ரூபா. 440-37½ யில் ரூபா. 250-00 கழித்து கொடுத்தது | | 190 | 37½ |
| என்னும் கொடுக்குமதியான மிகுதித் தொகை | ரூபா | 8045 | 03½ |
| ரூபா. 8045-03½ க்கு 17-7-75 தொடக்கம் 25-8-75 வரை 5 வீத வட்டியும் | | | |

R S. இராமநாதன் J P.

(Commissioner of Sales, Valuer and Auctioneer)

வடமேற்கு கொம்மிசனரும், விலை மதிப்பாளரும்
வல்லிபுரம் ரோட், துன்னாலை, ஏல விற்பனையாளரும்,
பருத்தித்துறை, 4-8-1975 64 8-8


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர் தீர்த்தத் திருவிழாக்கள்

—0—

யாழ். நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி பேய்ச்சியம்பாள் கோவில் தேர்த்திருவிழா இன்று நிகழ்கிறது. ஆடிப் பூர தினமாய நாளை தீர்த்த்திருவிழா நிகழும். தேர்விழாவன்று நண்பகல் நல்லை, குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் அவர்கள் சங்கீதகதாப் பிரசங்கம் நிகழ்த்துவார்கள். விசேட மேளக் கச்சேரியும் பஜனை நிகழ்ச்சியும் பிற்பகல் 1 மணிமுதல் நிகழும்.

## சேக்கிழார்

—0—

"உள்ளதை உள்ளவாறு மிகைப்படுத்தாமற் கூறியவர் சேக்கிழார் பெருமான்" என்று ஈழம் வந்த ஓதுவார் மூர்த்தி தங்கவேலு அவர்கள் ஓர் பொதுக் கூட்டத்திற் கூறியுள்ளார்.

## சாதாளையைப் பயன்படுத்துவோம்

—0—

இயற்கை அன்னை எமக்கு உதவும் செல்வங்களுள் சாதாளையும் ஒன்று அது கடல்படு திரவியங்களில் ஒன்றாகக் கருதப்பட வேண்டியது, அது பருவ காலந் தோறும் கடற் கரைகளில் எமக்காக ஒதுக்கப்படுவது. அதை நாம் சேகரித்து எம் வயல்கள் தோட்டங்கள் தோப்புக்களுக்குப் பசளையாகப் பயன் செய்தல் வேண்டும்; சாதாளை ஊட்டமுள்ள உணவுப் பொருளாகத் நோர்வே, சுவீடன், டென்மார்க் முதலிய நாடுகளில் பயன்படுகிறது. எங்கள் நாட்டில் யூரியா முதலிய செயற்கைப பசளைகள் வருவதன் முன் எம்மவர் சாதாளையையே பயன் செய்து வந்தார்கள், எம்பிரதேசத்துக் கடற்கரைகளில் ஏராளமான சாதாளை தேடுவாரற்றுத் தேங்கிக் கிடக்க நாம் வேறு பசளைகளுக்கு வீணில் அலைவது அடாது. சாதாளை சத்துள்ள பசளை

—

## அந்தண சீலர்

தமிழ் வடமொழி இரண்டிலும் பாண்டித்தியம் பெற்று வண்ணார்பண்ணை நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலையில் ஆசிரியராகக் கடமை ஆற்றியவராகிய பிரமஸ்ரீ வை. ஆதமநாத சர்மா அவர்கள் சென்ற திங்கட்கிழமை (4-8-75) டெகிவலையில் சிவபதமடைந்தார். அவரின் அந்தியக் கிரியைகள் டெகிவலையில் அவர் வசித்த இல்லத்தில் நிகழ்தப்பட்ட பின் கல்கிசை மயானத்தில் அவரின் பூதவுடல் தகனஞ்செய்யப்பெற்றது.

அவருடைய பிரிவு சைவ உலகத்திற்குப் பெரும் இழப்பாகும்.

## நாவலரும் கோயிலும்-

சேக்கிழார் விழாத் தலைமைஉரை

தொடர்கட்டுரை மறுவாரம்வரும்,

## பிரிவிடுதல் அறிவித்தல்

மாவட்ட நீதிமன்றம் சாவகச்சேரி

**இல. A 286 / 4711**

1. துரைச்சாமி மகேந்திரன்
2. பெண் தனலட்சுமி – புலோலி தெற்கு புலோலி தற்காலம் 139: முகாந்திரம் வீதி, கொள்ளுப்பிட்டி —வழக்காளி

எதிராக

1. மயில்வாகனம் மகாதேவவன்
2. பெண் பரமேஸ்வரி புலோலி தெற்கு புலோலி
3. வ முருகேசு மகள் செல்லம்மா (பராயமற்றவ) 41, பெரிய ஒழுங்கை வெள்ளவத்தை
4. முருகேசு கிருஷ்ணபிள்ளை (பாதுகாவலன்) 2-ம் எதிரிக்கு மக்கள் வங்கி யாழ்ப்பாணம்
5. செல்லையா பொன்னம்பலம் ராஜாக் கம்பனி, கிளிநொச்சி
6. பெண் சேதுப்பிள்ளை புலோலி தெற்கு, புலோலி
7. செல்லையா அருணாசலம் புலோலி தெற்கு, புலோலி
8. சின்னையா தருமலிங்கம் புலோலி தெற்கு புலோலி
9. பெண் மீனாட்சி புலோலி தெற்கு, புலோலி
10. வயிரவிப்பிள்ளை கிட்டிணபிள்ளை
11. பெண் கமலாதேவி புலோலி தெற்கு, புலோலி
12. வயிரவிப்பிள்ளை கதிர்காமு புலோலி தெறகு, புலோலி
13. வை. த. கந்தசாமி கைம்பெண் தெய்வானை
14. தம்பு வேலுப்பிள்ளை 24 சென்கில்டாஸ் ஒழுங்கை கொழும்பு 3
15. தம்பு சுப்பிரமணியம் புலோலி தெற்த, புலோலி
16. கணபதிப்பிள்ளை சிவகணேசன் இலங்கைவங்கி,மட்டக்களப்பு
17. முருகேசு நடராசா
18. பெண் முருகாம்பிகை, புலோலி தெற்கு, புலோலி
19. கணபதிப்பிள்ளை கார்த்திகேசபிள்ளை
20. பெண் சிவகாமசுந்தரி இல 104, N புளொக், கொழும்பு
21. சுப்பிரமணியம் கணபதிப்பிள்ளை
22. பெண் செல்வநாயகி 62, புத்தளம் வீதி, குருநாகல்
23. அருணாசலம் இராசரத்தினம்
24. பெண் வள்ளிநாயகி மீனாட்சி அம்மன்கோவில்வீதி சாவகச்சேரி
25. சின்னையா சத்தியவான்
26. பெண் அம்பிகைமலர் புலோலி தெற்கு, புலோலி
27. வல்லிபுரம் ஞானச்சந்திரன்
28. பெண் அன்னபாக்கியம் புலோலி தெற்கு, புலோலி
29. கார்த்திகேசு சபாரத்தினம் மறுநாமம் நமசிவாயம் D 3, சாண்டஸ கமம், பரந்தன்.

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் கரைச்சிப்பகுதி பரந்தன் கோயிற்பற்று முரசுமோட்டை இறை முரசுமோட்டை ஆதனம் 1951-ம் ஆண்டு 16-ம் இலக்கப்பிரிவிடல் கட்டளைச் சட்டத்திற்கமைய மேற்படி கோட்டில் மேற்படி இலக்கத்தில் ஓர் பிரிவிடுதல் வழக்கு தொடர்ந்து இருக்கிறது என இத்தால் அறிவிக்கப்படுகிறது. மேற்படி வழக்கில் மேற்படி கோட்டில் இதில் சம்பந்தப்பட்டோரை 1975-ம் ஆ ஆவணி மீ 14 · 10 மணிக்கு சமுகம் அளிக்கும்படி கட்டளை பண்ணப்படுகிறார்கள்.

1975-ம் ஆ ஆடி மீ 24-ம் திகதி

வரைந்தவர்
இ. சதானந்தன்
சட்டத்தரணி

கோட்டாரின் கட்டளைப்படி
P. Nadarajah
பதிவாளருக்காக

70 8.8

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதி மன்றில்

**வழ இல: M. B, 10916**

உரும்பிராய் - சிவசுப்பிரமணியம் சிவசோதிநாதன் – வழக்காளி

எதிராக

அனலைதீவு - விசுவநாதர் கணேசபிள்ளை - எதிரி

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M B 10916-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் நாலு துண்டு காணிகளை 1975-ம் வருடம் ஆவணி மாதம் 25-ந் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை:

முதல் வட்டி ரூபா 2000/- 25-6-69 தொடக்கம் 22-5-70 வரைகதும் ரூபா 3130/- 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 398-35,

### ஆதன விபரம்

(1) வடகாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி அனலைதீவு கோவிற்பற்று அனலைதீவு இறை "உயர்குளி" நிலப் பரப்பு ஐந்தும (நில. பர 5)ம் வான்பயிர்களும் இதற்கு எல்லை கிழக்கு வயித்தியநாதர் வேலுப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய வாதனம் வடக்கு அருணாசலம் சின்னத்தம்பிக்கும் பங்காளருக்குமுரிய வாதனம் மேற்கு அரியபுத்திரன் வேலுப்பிள்ளைக்கும் மறு பேருக்குமுரிய வாதனம் தெற்கு விசுவநாதர் கைம்பெண் நாகமுத்துவுக்குரிய வாதனம், பதிவிலக்கம் C 82/48.

(2) ஷை அனலைதீவு 'ஊரிப்புலம்'' நிலப்பரப்பு இருபத்தாறு நாலில் ஒன்று நில, பர, 26¼)ம் செய்பயிர்களும் இதற்கெல்லை கிழக்கு வயித்தியநாதர் வேலுப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய வாதனம் வடக்கு வயித்தி நாகமணிக்கும மறுபேருக்குமுரிய வாதனம் தெற்கு குழந்தை பெண் சின்னாச்சிக்குரிய வாதனம் மேற்கு வயித்தியநாதர் வேலுப்பிள்ளைக்கும மறுபேருக்குமுரிய வாதனம் இதடங்கலில் சொரியலாய் ஐந்திலொருபங்கும் (1/5) இதைச் சேர்ந்தவைகளும், பதிவு C 82/54

(3) ஷை இறை அனலதீவு 'பெருக்கடி'' நிலப்பரப்பு பதினென்றும் குளிகள் [illegible] பயிர்களும் கிணறும் [illegible] வுக்கும் பங்காளருக்குமுரிய வாதனம் வடக்கும் மேறகும விசுவநாதர் கைம்பெண் நாகமுத்துவுக்குரிய வாதனம் தெற்கு தண்ணீர் வாய்க்கால். பதிவு இலக்கம் C 82 / 61

(4) ஷை அனலைதீவு இறை 'முருகை'' நிலப்பரப்பு பதினாலே முக்கால் (நில. பர 14 3/4) இதற்கெல்லை கிழக்கு விசுவநாதர் முத்துக்குமாருவின் உரித்தாளருக்குரிய வாதனம் வடக்கு வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளைக்கும் மறு பேருக்குமுரிய வாதனம் மேற்கு முடிக்குரிய காணியும் இராமநாதன் பளனிக்குரிய வாதனமும தெற்கு சண்முகம் கணபதியின் ஆதனம். பதிவிலக்கம் C 362/45

**இ. சு. தர்மரத்தினம்**
கொமிசனரும்
விலைமதிப்பாளரும்

46, 3 ம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்
57, 8-8

## Commission Sale
## கோட்டுக் கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில். வழ. இல. 12685:

சின்னத்தம்பி சினனராசா பொலிகண்டி வழக்காளி

எதிராக

(1) ஆழ்வான் வைரவன் (2) பெண் செல்லம்மா சமரபாகு வல்வெட்டி — எதிரிகள்

மேற் குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனங்கள் 1975 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் (1–9–75) 1-ஆம் திகதி திங்கட்கிழமை முற் பகல் 10-00 மணி தொடக்கம் குறித்த ஆதனங்களிடமிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று,

(1) கரணவாய் கொற்றுவத்தை குறிச்சியிறை பள்ளன் தோட்டம் நிலப் பரப்பு 23¾ மேற்படி நில பர. 6¼ இவைகளில் கிழக்கரைவாசிக்கு நில. பர 15. எல்லை கிழக்கு பின் சொல்லப்படும் 2ம் ஆதனம், வடக்கு இராசா பெண் சோபனத்துக்கு உடையவாதனம், மேற்கு முருகன் மாணிக்கனுக்கும் மறு பேருக்குமுடையவாதனம். தெற்கு கந்தையா வடிவேலு பெண் அம்மாப்பிள்ளைக்கும் மறு பேருக்கும் உடையவாதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம், பனைகள், வடலிகள் அடங்கலிற் சொரியலாக அரைவாசியும், இதற்குக் கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலை மதிப்பு ரூபா 3000/–

(2) மேற்படி இறை வண்ணன் தோட்டம் நில பர 12- மேற்படி நில பர 2¼ ஆக நில பர 14¼ எல்லை கிழக்கு ஆழ்வான் மாணிக்கனுக்கும் ஆழ்வான் கிருஷ்ணபிள்ளைக்குமுடைய ஆதனங்களும். மறுவாதனமும், வடக்கு கந்தையா தம்பையாவுக்கும் மறு பேருக்குமுடையவாதனம். மேற்கு மேற் சொல்லிய 1ம் ஆதனம். தெற்கு சின்னத்தம்பி சுப்பிரமணியத்தினுரிமைக்காரருக்கும் மறு பேருக்குமுடையவாதனம். இவ் வெல்லைக்குட்பட்ட நிலம் பனைகள் வடலிகள் அடங்கலிற் சொரியலாய் நாலிலொருபங்கும். இதற்கு கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலை மதிப்பு ரூபா 3500/—

| | | | |
|---|---|---|---|
| தீர்வைத் தொகை (4925-00) | ரூபா | 4925 | 00 |
| ரூபா 3000/-க்கு வட்டி 10 வீதம் 3-6 1974 — 15-1-75 வரை | ரூபா | 153 | 00 |
| ரூபா 5108 · 00 வட்டி 6 வீதம் 16-1-75 தொடக்கம் இறுக்கும்வரை | ரூபா | 170 | 26 |
| கோட்டுச் செலவு | ரூபா | 323 | 90 |
| மொத்தம் | | 5602 | 16 |

**கா. முத்துக்குமாரு ஐயர்**
நீதிமன்ற ஆணையாளரும்
விலை மதிப்பாளரும்

"தங்கவேல் ஆலயம்"
"சந்நிதி வேல்"
பருத்தித்துறை. 21-7-75

61, 8-8-

## பிரிவிடுதல் நொத்தீஸ்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில்

இல. 112,71

கரணவாய் வடக்கு சின்னத்தம்பி விசுவலிங்கம் — வழக்காளி

எதிராக

1 கரணவாய் வடக்கு குருநாதர் வல்லிபுரம்
2 ,, பெண் மீனாட்சி
3 ,, தாண்டவர் நாகநாதர்
4 ,, பெண் இலட்சுமி
5 ,, இராமலிங்கம் சோமசுந்தரம்
6 ,, பெண் பரமேஸ்வரி
7 ,, ஆறுமுகம் தங்கவேல்
8 ,, செல்லையா நாகேஸ்வரி
9 ,, இரத்தினம் குணசீலன்
10 ,, ஆறுமுகம் சடாட்சரம்
11 ,, கிருஷ்ணபிள்ளை தனபாலசிங்கம்
12 அல்வாய் மேற்கு ஸ்ரிவின் செல்வராசா நடராசா
13 கரணவாய் வடக்கு நரகநாதர் கதிரவேலு

—எதிரிகள்

கரணவாய் நவிண்டில் குறிச்சி இறை உடுப்பிட்டிக் கோவிற்பற்று, வடமராட்சிப் பகுதி. யாழ்ப்பாணம் டிஸ்திறிக், வடமாகாணம் நெடுங்கேணி நி. ப. 5, 5/8 என்னும் ஆதனம் 1951ம் ஆண்டின் 16-ம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச் சட்டத்திற்கமைய ஷை கோட்டில் மேற்படி இலக்கத்தின் ஓர் பிரிவிடுதல் வழக்கு தொடர்ந்திருக்கின்றதென்று இத்தாலுமக் கறிவிக்கப்டிருக்கின்றது.

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படி கோட்டில் 1975.ம் ஸு டரட்டாதி மீ 1 ட 10 மணிக்குச் சமுகமளிக்கும்படி கட்டளை பண்ணப்பட்டிருக்கிறார்கள்.

கோட்டாரின் கட்டளைப்படி
ஆ. தவராஜா
றெஜிஸ்ரார் & C. C

தா. வன்னியசிங்கம்
வழக்காளிகளின் சட்டத்தரணி
1975-ம் ஆ ஆடி மீ 28 ட
64 8-8

## நீரைத் தேக்கி நிலத்தை வளஞ்செய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## THOUGHTS TO BE TREASURED

பரம்பிரமம் இவன் என்றும் பரசிவன் தான் என்றும்
பரஞானம் இவன் என்றும் பராபரன் தான் என்றும்
அரன்தரு சீர்நிலை எல்லாம் இவனே என்றும்
அருட்குருவை வழிபடவே—சிவமே ஆக்கும்....

He is the Supreme Brahmam. He is the Supreme Sivan. He is the Supreme Gnanam, He is the Supreme of Supremes, He indeed is the different forms of manifestation of God,—thus should the Gracious Guru be regarded and adored.....if you so adore and comply with the Guru's instructions), He will indeed make you ( become of the nature of Sivam'.

THE SAIVAPRAKSA PRESS

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.

திருச்சிற்றம்பலம்

Hindu Organ

FRIDAY, AUGUST 8, 1975

# MAKING COMMON CAUSE

That more achievements could be made if only the various organizations would make common cause was the opinion expressed by the President of the Sabhai for the preservation of Navalar's ideals at a meeting held last week. We have always been advocating the need for unified and united movements in any sphere of work, religious, social or political. Many years back associations were a few but most representative in character and content. The voices of such unions did have the desired effect. But, however, with the enthusiasm for localized and decentralized activities gaining ground there has been multiplicity of associations all having the same purpose in view. The result has been a weakening in the ultimate value of the aggregate of such efforts.

Associations carry with them the ambitious description namely 'All Island' but seldom have the strength of such representative authority. Hence there is division of devotion which cannot be conducive to the working of schemes.

It should be borne in mind that there are in the religious sphere several affairs that require speedy and early attention. In the name of religion, devotees must be prepared to make common cause and present demands or put forward schemes for quick realization of the objectives.

Though the common man has become more interested in religious affairs and consequently in ceremonies, yet the fact remains that there is more of talk than of work; often talks remain at that level without being pursued to the logical conclusion in the form of deeds Conservation of energy and enthusiasm, money and means must be regarded as imperative as dissipation of these factors in a diffused manner would eventually denote that all these have gone to waste.

It will be useful if the opinion referred to above is acted upon and at least in the affairs of the preservation of Navalar's Trust and charities common cause is made.

*Letter to the Editor*

## OF ROMAN DIMENSIONS

Sir,

Measures pertaining to the relief of indebtedness and purification of public life now being contemplated, are of interest. Such measures do not appear to be new. They would appear to have received attention of administrators and statesmen from very ancient times.

These measures now contemplated bring to mind steps taken by Kings and Roman legislators centuries ago.

The steps taken to alleviate the indebtedness of public servants is no doubt worthy of commendation but unless steps are also taken at the same time to inhibit borrowing again, the last stage will be worse than the first. This salutory precaution appears to have received the attention of the famous statesman and legislator Solon who while cancelling debts made it difficult for parties so benefited from borrowing. He "cancelled all existing debts and mortgages, thereby freeing the peasants and their lands at a blow, and for the future forbade all borrowing on the security of the person. This reform was lasting and made an end of serfdom in Attica".

And regarding the purification of public life Amasis ( C 600 BC ), an Egyptian King, made it obligatory for every citizen to disclose his means of living. He established "the law that every Egyptian should appear once a year before the Governor of his canton, and show his means of living........... Solon the Athenian borrowed this law from the Egyptians and imposed it on his countrymen,......." It is also of topical interest to refer to the decree of a Roman Emperor which vested all space above and below a land in the person, owning the land and that it would appear to have been reversed for the first time when availability of land and housing became an acute problem in Bombay.

In this context an extract of a suggestion made by me to the Ministry of Housing and which would appear to have been adopted by the Alif Committee, by enacting legislation to divide ownership of flats at different levels, is I think of interest' solution to the question of non availability of land in main cities suggests itself to me after reading a news article, the source of which I cannot remember at the moment

It has been pointed out that a Roman Emperor had decreed that all space vertically above and below a land belongs to the owner of the land. Since then no other person can build on top of another building even if he could afford to do so and the owner unable to do so This article referred to the City of Bombay where a law has been enacted to change the law". It is also of interest to note that a law, also of classical dimensions was passed when the Land Development Ordinance was enacted about the year 1933 which prohibited the losses of the land from selling or mortgaging the land issued to him He could bequeath the land only to a member of his family. This had a two fold effect, it ensured that the land remained with the family and also eliminated another formidable evil which has plagued the peasantry for centuries namely fragmentation. This was done on the suggestion of C. Suntharalingam who in his brief skirmish with the Civil Service had noted that lands alienated to peasantry passed in a few years into the possession of petty mudalalis. The magnitude of the boon conferred on tens of thousands of peasants by this measure can be gauged from the fact that every acre of the hundreds of thousands of acres alienated to peasants, during the last few decades still remains with the same family.

Yours faithfully
J. R. Sinnatamby
286, Buller's Road.
Colombo 7.
9-7-75.

## SALE OF UNREDEEMED JEWELLERY

I shall sell by public auction the unredeemed jewellery pawned between 1-6-1973 and 31-7-1974 with Mr. V. Subramaniam of Elakady Karainagar North Jaffna on Tuesday the 26th August 1975 commencing at 9-30 A. M. at the said pawn shop.

"Raja Giri"
643 K K. S. Road
Jaffna.

V. S Cuttipillai
Auctioneer.

14, 1 & 8

## Soil Fertility Ritual in Indus Civilization

Rituals of worship of Mother Goddess and Fertility cult in various parts of India and other parts of Asia were inseparably connected.

This is revealed from a study of excavation in the Indus Valley according to Prof. Himansu Bhusan Sarkar of Midnapore in West Bengal. Some terracotta figurines discovered in Southern Sind bore remarkable affinity to those from pre Harappa sites of northern and southern Baluchistan.

Many of the figurines from Mohenjodaro were painted with red slip or wash and those from Harappa even retained the traces of paint, the red being the fertility symbol. He said in a paper presented at the All India Oriental Conference held at Kurukshetra.

Prof. Sarkar said the magical rites to preserve the fertility of the soil belonged to the special competence of women whose child - bearing capacity was comparable to the productive nature of earth, The clan life, in which the mother headed every family, created Mother Goddess and raised her to the supreme position.

### Interesting Seals

Prof. Sarkar said in the context, some seals from the Indus Valley appeared to be quite interesting. One such seal from Harappa showed, on the one side, a nude female figure, with legs stretched upwards, hand downwards, with plant issuing from the womb. On the other side was found a female figure with dishevelled hair and arms upraised in fight, with a male figure threatening her with a shield-like object in the other.

"It seems to me that both the nude female figurines refer to the same victim before her sacrifice to the Mother Goddesses", he said and added that Vedic religion did not include human sacrifice in its rituals to propitiate Mother Goddess or Mother Earth.

—Madras Hindu

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்.

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Saiva Prakasa Press 450 K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday August 8, 1975.

EDITOR-IN-CHIEF R. N. SIVAPIRAKASAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org